# ஆத்ம ஜோதி



விநோபாஜீ

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 7 | ஜயவருஷ பங்குனி 1-ந்வ (14-3-55) | சுடர் 5 |
|---|---|---|

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | ராமநாமசெபமொன்றே......... | 129 |
| 2 | பிரார்த்தனைவேளைப்............ | 130 |
| 3 | விநோபாஜீ | 131 |
| 4 | பூதானம் அல்லது......... | 135 |
| 5 | விநோபாஜீ காட்டிய வழி | 137 |
| 6 | பூமிதானப் புரட்சி | 140 |
| 7 | திருக்குறளைப்படி | 141 |
| 8 | பகவத்கீதையின் மகிமை | 144 |
| 9 | துர்க்கைவணக்கத்தின் பெருமை | 146 |
| 10 | மனமே! எதற்காக...... | 148 |
| 11 | குணங்களை......, பெருக்காதீர்கள் | 149 |
| 12 | புதுயுகப் .........விநோபாஜீ வாழ்க | 151 |
| 13 | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுவாமிகள் | 153 |
| 14 | ஆனந்தாச்சிரமச்செய்திகள் | 154 |
| 15 | அருள்நெறித்திருக்கூட்டத்தின்.............. | 155 |
| 16 | ஸ்ரீகேதார் பத்திரி யாத்திரை | 156 |
| 17 | Vinobha Exposes A Fallacy | (Cover'3rd Page) |


## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டெல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]



## ராம நாம செப மொன்றே எனது சாதனை

யோகப் பயிற்சிகளெதுவுமே எனக்குத் தெரியாது. நான் பயிலுவது என் சிறுபிராயத்தில் என் செவிலித்தாயினிடம் கற்றுக்கொண்டதொன்றையே. எனக்குப்பேய்பிசாசுகளென்றால் பயம். அவள் எனக்கு 'பேய் பிசாசுகளே கிடையாது, ஆனால், உனக்குப்பயமாயிருந்தால் ராம நாமத்தை செபம் செய்' என்று சொல்லி வந்தாள். நான் சிறுவயதில் கற்றது என்மனத்தில் பேருருவம் பெற்று விட்டது. என் வாழ்க்கையில் இருள் சூழ்ந்த சந்தர்ப்பங்களில் சூரிய ஒளியைப்போல் அது உதவியிருக்கிறது.

நான் கூறும் ராம நாமத்திற்கும் மந்திரயந்திரங்களுக்கும் சம்பந்தமில்லை. மனவொருமையுடன் ராம நாமத்தை செபிப்பதென்பது ஒப்புவமையற்ற ஒரு சத்தியினிடமிருந்து உதவி பெறுவதாகுமென்று நான் சொல்லியிருக்கிறேன். இதனுடன் ஒப்பிடும்போது அணுக்குண்டின் சக்தி ஒரு சக்தி அல்ல. இதற்கு எல்லா நோய்களையும் போக்கும் திறனுண்டு. ராம நாமத்தை மனவொருமையோடு செபிக்க வேண்டுமென்று சொல்வதுசுலபமே தவிர, உண்மையாக அவ்வாறு செய்தல் மிகவும் கடினமென்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும். ஆயினும், மனிதனுக்கு உடமையாகக் கூடியவை அனைத்திலும் பெரியது அதுவே.

ராமநாமம் சிலருக்கே உரியதல்ல. அது எல்லாருக்கும் சொந்தம். அதைச்செபிப்பவன் என்றும் வற்றாத, விலைமதிக்க வொண்ணாத பொக்கிஷத்தைத் தனக்கெனச் சேமித்துக் கொள்கிறான். நாம் அதிலிருந்து எடுக்க எடுக்க அது மென்மேலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கொரு முடிவேயில்லை. உபநிடதம் கூறுவதைப்போல முடிவில்லா வஸ்துவை முடிவில்லாததிலிருந்து எடுத்தபிறகும் முடிவில்லா வஸ்துவே எஞ்சிநிற்கிறது. எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்து.

காந்தியடிகள்

## பிரார்த்தனை வேளைப் பொன்மொழிகள்

சேவையுடன் நமது வாழ்வு பரிசுத்தமானால், நாம் கடவுளின் ஒளியைக்காணப் பெறுவோம். கடைசியில் கடவுளால்தான் எதுவும் சாத்தியமாகும்; நாம் அவருடைய வெறும் கருவிகளே. அவ்விதம் கருவிகளாயிருக்க நம்மிடம் தாழ்மையும் அகம்பாவமின்மையும் வேண்டும்.

— — — — — — —

மக்கள் யாவரும் ஒரே குலம் என்று வேதங்கள் கூறுகின்றன, புத்தரும் அதையே உபதேசித்தார். இந்தியா வேறு நாடுகளின்மீது படையெடுப்பதில்லை, இந்தியன் ஒருவனுக்குத் தேசிய உணர்ச்சி பெருகுவதைக்காட்டிலும்மனிதஉணர்ச்சிபெருகுவதேஇலேசாகும்.

— — — — —

யுத்தம் போன்ற நாசகாரியங்களில் கலந்து கொள்ளாமை மாத்திரம் அஹிம்சையாகாது. அஹிம்சை மிகுந்த சக்தி வாய்ந்த ஆயுதம், அதுவே ஆக்கும் வல்லமையுள்ள அன்பாகும். சமூக ஏற்றத்தாழ்வு பசி, பிணி இவற்றைப் போக்கும் சக்தியும் அதற்குண்டு.

— — — — —

குர் ஆனில் கடவுளை நம்பவேண்டுமென்று கூறப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் நற்பணிகள் புரிவதும் அதோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இரண்டும் சேர்ந்தே ஒரு பொருளாகிறது. ஒன்று அகத்தையும் மற்றது புறத்தையும் பற்றியது. 'ஹக்' கும் 'ஸப்ர' மும், அதாவது உண்மையும் அன்புமே, சுருங்கக்கூறினால் இஸ்லாமாகும். இதுவே இந்து மதம், இதுவே கிறிஸ்தவ மதம், மதங்களனைத்தும் இதுவே.

— — — — — —

சந்தனக்கட்டையைத் தேய்க்காதிருந்தால், அதின் மணம் எவ்வாறு கிளம்பும்? அப்பொழுது சந்தனக்கட்டைக்கும் மற்றைய கட்டைகளுக்கும் வேற்றுமை ஏது? நாம் மக்கள் சேவை புரியவில்லையானால் மனிதராய்ப் பிறந்து நாம் சாதித்ததுதான் என்ன? உண்பதும்உறங்குவதுமாகவே நாட்களைக்கழித்தோமென்றால், மிருகங்களுக்கும் நமக்கும் வித்தியாசமென்ன?



## வினோபாஜீ

[ஆசிரியர்]

மகாத்மாவை நன்கு அறிந்து, அவர் தம் பெருமையை உலகப்புகழ் ஏணியில் எட்டச்செய்தபெருமை தென்னாட்டுக்குரியதே. இன்றும் தென்னாட்டார் காந்தியைப் போற்றும் அளவில், வடநாட்டில் இல்லை யென்றால் அது மிகைப்படுத்திச் சொல்வதன்று.

இத்தகைய வடநாட்டார் உள்ளத்திலே, காந்தியைப் பார்க்கிலும் பூஜிக்கத் தகுந்தவராகஇன்று மதிக்கப்பட்டிருப்பவர் ஆசார்ய வினோபாஜீ அவர்கள். பிற்காலத்தில் கோயில் கட்டி வணங்கத்தக்க நிலையில் வட நாட்டிலே இன்று வினோபாஜீ இடம் பெற்றுள்ளார்.

மகாத்மாவின் தனிநபர் சத்தியாக்கிரகத்தின் போது முதன்முதல் சத்தியாக்கிரகியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப் பெற்று அவருடைய பெயர் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. அந்தப் பெயர்வழி வேறுயாருமல்ல, நமது பூஜ்ய வினோபாஜீ அவர்கள்தான், வினோபாவின் பெயரைக்கண்ட உடனே மக்கள் ஒவ்வொருவரும் இவர் யார்? எத்தனையோ பேர் இருக்க இவரைக் காந்திமகாத்மா இந்தச் சத்தியாக்கிரகத்திற்குத் தேர்ந்தெடுக்கக்காரணம் யாது? என்று பல கேள்விகளைக் கேட்டனர். அன்றுவரை வினோபாஜீ காந்தீயதத்துவங்களை அறிந்து அவற்றை வாழ்க்கையில் அனுட்டிக்கும் சாதகனாவே இருந்தார். அவர் சாதனையின் முதிர்ச்சியை மகாத்மா நன்கு அறிந்திருந்தாராதலின் முதல் சத்தியாக்கிரகியாக மகாத்மாவால் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

தமிழ்உட்பட இந்தியாவில் உள்ளஎல்லாப்பாஷைகளையும் அறிந்த ஒருபுனிதர் வினோபாஜீ. அவர் சமஸ்கிருதத்தில் வித்துவான். சபர்மதி ஆச்சிரமத்தின் முதல் அங்கத்தினர்களுள் அவர் ஒருவர். தம் சமஸ்கிருதப் பயிற்சியை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காக ஆச்சிரமத்திலிருந்து ஒருவருஷ ஓய்வு பெற்றுக்கொண்டு சென்றவர், சரியாக ஒரு வருடம் கழித்து, எந்தத்தேதி எந்தமணிக்கு ஆச்சிரமத்தை விட்டுப்போனாரோ? அதே தேதியில்அதேமணிக்குப்பேசாமல் ஆச்சிரமத்திற்குத் திரும்பி வந்துசேர்ந்தார், அன்றையத்தினம் அவர்வர வேண்டுமென்பதை மகாத்மாவே மறந்திருந்தார்.

வினோபாஜீ ஆச்சிரமத்தின் எல்லாத்தொண்டுகளிலும் -சமையல் முதல் கக்கூஸ் சுத்திவரையில்—கலந்து கொண்டிருந்தார். எந்த நேரமும் ஏதாவதொரு தொண்டில் ஈடுபட்டிருப்பார். வினோபாவைப்பற்றி ஆச்சிரமத்திற்கு வந்த அன்பர் ஒருவர் மகாத்மாவிடம் வினவிய போது, ஆச்சிரமத்திற்கு வரும் தொண்டர்கள் எல்லாரும் ஆச்சிரமத்தில் ஏதோகற்றுக்கொள்ள வருகின்றார்கள். ஆனால் இவரிடமோ ஆச்சிரமவாசிகள் தினங்கற்றுக்கொள்ளுகின்றார்கள், என்று கூறினார் மகாத்மா. வினோபா இயற்கையிலேயே படிப்பில் பிரியமுள்ளவர். ஆதலால்தான் பலபாஷை அறிவு அவருக்கு இலகுவில் கைகூடியது.

மகாத்மா தாம் உருவாக்கும் திட்டங்களை தமது வாழ்க்கையில் அநுட்டித்தே மக்கள் முன்னிலையில் வெளிப்படுத்துவது வழக்கம், கற்பனையினால் மகாத்மா எந்தத் திட்டத்தையாவது வெளிப்படுத்தவில்லை. ஆனபடியினால் தான் அவரது திட்டங்கள் நாட்டில் இன்றும் உயிர்பெற்றிருக்கின்றன. இத்தகைய காந்தியாரின் அநுபவசோதனைக்கூடத்தில் முதன் முதல் சித்தியடையும் மாணவன் யாரென்றால் வினோபா அவர்களே. பல இடங்களில் குருவைக் கடந்துவிட்டார் சிஷ்யர். மகாத்மாவின் நிர்மாணத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் இலக்கியமாக விளங்கியவர் மகாத்மாவே. இலக்கியத்தின் பயனாக விளங்கியவர் வினோபா அவர்கள். ஆயிரம் குருமாரைத் தேடலாம், ஒரு உத்தமசீடனைக்காண்பது அருமை என்றார் சுவாமி விவேகானந்தர். அந்த ஒரு உத்தம சீடன் யார் என்றால் வினோபாவைத்தான் குறிப்பிடலாம்.

பாரத நாட்டின் பண்பாடு அன்று தொடக்கம் இன்றுவரை இனிமேலும் மாறாது. வினோபாவைப்போன்ற புனிதர்களாலேயே பாரதப்பண்பாடு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அன்று தொடக்கம் புத்தர் காலம்வரை, புத்தர் தொடக்கம் மகாத்மாவரை, அகிம்சை தனிப்பட்ட மனிதனின் சக்தியாகவே இருந்துவந்துள்ளது. அதனைச் சமூகசக்தியாக மாற்றியபெருமை ஆசார்ய வினோபா அவர்களுக்குரியதாகும் பஞ்சபூதங்களையும் ஆண்டவன் எல்லார்க்கும் பொதுவென்றே படைத்தான், காலகதியில் மனிதன் பிருதுவி சக்தியில் சுயநல உரிமைபாராட்டத் தொடங்கினான். ஆகாய வெளி எல்லையற்றுப்



பரந்து எல்லார்க்கும்பொதுவாக இருப்பதாலும், இன்றையமனிதன் அதற்கும் எல்லை நாட்டி, இதற்கூடாக உனது விமானம் செல்லக்கூடாது என்று வலியச் சண்டைக்குச் செல்கின்றான். ஆகாயமும் காற்றும், நெருப்பும், நீரும் எல்லார்க்கும் எவ்வகையில் பொதுவானதோ அவ்வகையில் நிலமும் பொதுவானதே, இந்தப் பொதுமை மனிதனிடமிருந்து அகன்றமையினால் தான். உழைப்பாளி பட்டினி கிடக்கவும் நில உரிமை இழந்து நிற்கவும் ஏற்ற நிலைமை ஏற்பட்டது. இதை உணர்ந்தமையினால்தான் பாரதியார்

“தனி ஒருவனுக்குணவில்லை யெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்” என்று வீரகர்ஜனை புரிந்தார், பாரதியார் பாட்டு பலர் உள்ளத்தைத் தொட்டிருக்கலாம், படித்தோர், கேட்டோர் கண்ணீர் பெருக்கியிருக்கலாம். ஆனால் அவை யெல்லாம் பிரசங்க மேடையளவோடு நின்று விட்டன. ஆனால்

தனி ஒருவனுக்கு நிலமில்லை யெனில் பாரத தேவியைத் துண்டு ஆடிடுவேன் என்று எழுந்தது ஒரு வீரசிங்கம். அந்த வீரசிங்கம் தான் வினோபா அவர்கள். நிலமில்லார்க்கு நிலம் வேண்டிக் கால்நடையாத்திரை ஆரம்பித்தார்கள். வினோபாவின் பிரமச்சரியம், தன்னலமற்றசேவை, இறை நம்பிக்கை இவையெல்லாம் சேர்ந்து மக்கள் உள்ளத்தே புகுந்து வேலைசெய்யத்தொடங்கியது. எனக்கு எனக்கு என்று உரிமைபாராட்டிக் கொண்டிருந்த நிலம்படைத்த பிரபுக்கள் எல்லாரும் இதோ எனது பூதானம் பூதானம் என்று ஒவ்வொருவரும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைக் கொடுக்க முன் வந்தனர்,

ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொரு தானமும் ஒவ்வொரு யக்ஞமும் சிறப்படைந்து விளங்கின, எந்தெந்த காலத்திற்கு எதெது தேவையோ? அந்தந்தக் காலத்தில் அதது முக்கியம்வாய்ந்து விளங்கின. இன்றைய சந்தர்ப்பத்தில் நாட்டில் பூதான யக்ஞமே வழிபாடுகள் எல்லாவற்றுள்ளும் சிறப்பானதாக விளங்குகின்றது. இன்றைய தரித்திர நாராயணர்களுக்கு மீட்சி அது ஒன்றாலேதான் ஆகும் எனக் கண்டார் வினோபாஜீ. உடனே காந்தியத்தின் வழிநின்று தொண்டைத்தொடங்கினார். வெற்றிமேல் வெற்றியாக நடை பெற்றுக்

கொண்டிருக்கிறது பூதான வேள்வி. மக்களும் இவ்வேள்வியால் மனம்மாறினர், தன்னைப்போல் மற்றவனையும் நேசிக்கத் தொடங்கினர். நிலத்தில் பாடுபடுவதற்கேற்ற பலனைப்பெறுவதற்கு உரிமை உண்டே தவிர நிலச்சொந்தம் ஆண்டவனுக்குரியது என மக்கள் உணர்ந்தனர்.

மனிதனது வாழ்வுஉடல் நோக்கியும், மனம்நோக்கியும், உயிர் நோக்கியும் பலபடித்துறைகளில் பிரிந்து கிடந்தன. ஆத்மீக வாழ்விலுள்ளோர் இலௌகீகரை வெறுத்தனர். இலௌகீகர் ஆத்மீகவாழ்விலீடுபட்டோரைப் பார்த்து கையாலாகாதவர் என்றுபரிகசித்தனர் இவர்களெல்லோரையும் ஒரே சொல்லில் அடக்க முடியுமானால் அது 'சர்வோதயம்' ஆகும். அச்சர்வோதயத்தின் பெருமையை மக்கள் உணரும் வகையில் வாழ்க்கையில் காட்டிவைத்த பெருமை வினோபா அவர்களுக்குரியதே. மனிதனது வாழ்வின் பண்பாட்டிற்காக ஏற்பட்ட காந்தியாரின் நிர்மாண வேலைகள் முதலாக அரசியல் ஆத்மீகம் ஈறாக உள்ள எல்லாம் சர்வோதயத்துள் அடக்கமே.

காந்தியாரின் பூத உடல் பிரார்த்தனையில் மறைந்தது. மகாத்மா பலஇடங்களில் கூறியுள்ளார்கள், எதுசெய்யாமலிருக்கமுடியுமானாலும் பிரார்த்தனை செய்யாமல் என்றால் இருக்கமுடிவதில்லை. பிரார்த்தனையில் அவ்வளவு நம்பிக்கையும் ஈடுபாடும் இருந்தது மகாத்மாவுக்கு. மகாத்மா எங்கு இருந்தாலும் மாலைப் பிரார்த்தனையை அவர் தவற விடுவதில்லை. அதே போல வினோபா அவர்களும் தாம் செல்லுமிடமெங்கும் மாலைப் பிரார்த்தனையைத் தவற விடுவது கிடையாது. அன்று மகாத்மா முன்னிலையில் சாதிசமய வேற்றுமையற்று ஆயிரக் கணக்கான மக்கள் பிரார்த்தனையில் பங்கு பற்றினர். இன்றும் அதே காட்சியை வினோபாஜீ முன்னிலையில் காண்கின்றோம். சுருக்கமாகக் கூறினால், 'மகாத்மா வினோபாஜீக்குள் புகுந்து இன்று வாழ்கின்றார்' என்று கூறிவிடலாம்,



# பூதானம் அல்லது அன்புவழியில் நிலப்பங்கீடு

*(ஹலம் டெனிஸன் என்னும் அறிஞர் 'ஹிந்துஸ்தான் ஸ்டான்டேர்ட்' என்னும் பத்திரிகையின் குடியரசு அனுபந்தத்தில் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு)*

ஆச்சார்ய வினோபா பாவே தமது பத்தொன்பது வயதில் காந்தியடிகளைச் சேர்ந்தார். முப்பத்தெட்டு ஆண்டுகள் கழித்து, நம்மிற் பலர் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பும் வயதான, ஐம்பத்தெட்டாவது வயதிற்றான், அவரைப் பற்றிப் பலருக்குத் தெரியவந்தது. எனினும்,யாருமறியாது பெற்ற இந்த நீண்டகாலப் பயிற்சிக்கு ஒருதனிப்பட்டசிறப்புண்டு. காந்தியடிகளிலும் பார்க்கவினோபாஜீஇருபத்தைந்துவயது சிறியவராயினும், மகாத்மா அவரைசீடரென்ற முறையில் நடத்தாது.குருவாகவே நடத்திவந்துள்ளார்.தனது சீடருடையகுணநலத்தை நன்றாக ஆராய்ந்தறிந்தார். இளைஞரான வினோபாஜீயின் பெற்றோருக்கெழுதிய கடிதத்தில் "அவரடைந்திருக்கும் ஆன்மீக சித்திகளை யடைவதற்கு, நான் எனது வாழ்க்கைமுழுவதையும் ஆன்மீக முயற்சியில் ஈடுபடுத்தி வந்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார். வினோபாஜீய்வர்கள் ஒருபற்றற்ற துறவியும், தத்துவஞானியுமாவர். இதே நிலையைத் தான் அடைய முடியவில்லையேஎன்றுமகாத்மா காந்தியடிகளே பலமுறைமனம் வருந்தியதுண்டு. பிரிட்டிஷார் வினோபாஜீயை இருமுறைக்குமேல் சிறைக்கு அனுப்பவில்லை. மகாத்மாவிற்கு மிகநெருங்கியவரான அவருக்கு, பிரிட்டிஷார் வழக்கத்தை நோக்க அது மிகமிகக் குறைவான தண்டனை யென்றே கூற வேண்டும். ஆயினும், காந்தியடிகளின் வாழ்க்கையைவிளங்கிக்கொள்ள விரும்பிச்சென்ற எவரும், உடனேயோ அல்லதுசிலநாட்கழித்தோ வினோபாஜீயின் ஆசிரமத்திற்கு கட்டாயம் போகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். "எனது கொள்கைகளையும். எண்ணங்களையும், அவர் [வினோபா] என்னிலும் பார்க்கக்கூட விளங்கிக்கொள்கிறார்," என்று காந்தியடிகள் என்னைப்பார்த்துக்கூறி எனக்குத் தடுமாற்றத்தை யுண்டாக்கி விட்டார்.

வினோபாஜீயிடத்துப்புத்திமதி கேட்கச்செல்வோர், அனேகமாகப் பலவேளைகளில் ஏமாற்றமடைந்தே திரும்பவேண்டிவரும். 1946ல் நானும் அந்நோக்கத்துடன் சென்றிருந்தேன். காலை 8-15 க்குச்சென்றயான் அவர் தன்னைக்காண வருபவர்க்காக ஒதுக்கிவைத்துள்ள நேரம் ஏற்கனவேமுடிவடைந்துவிட்டதுஎன்று அறிந்தேன், ஏனெனில், இன்றைய வழக்கம் போலவே, அன்றும் மூன்று மணிக்கே

எழுந்து விட்ட வினோபா தனது படிப்பிற்கு ஆரம்பித்து விட்டார். தாழ்வாரத்திண்ணையின் ஒருகோடியில், தூரத்தில், வளைந்த முதுகையும், குழம்பியிருந்த தலைமயிரின் ஓரத்தையும், சில புத்தகங்கள் அடுக்காக விருப்பதையுந்தான் கண்டேன். வேறொன்றும் என் கண்ணுக்குத் தென்படவில்லை. நானும் அவரது சீடரொருவரும் ஒருமூலையில் நின்று கொண்டிருந்தோம். சீடர் தனது குருநாதரது துறவு வாழ்க்கையைப் பற்றி மிகவும் உற்சாகத்துடன் கூறிக்கொண்டிருந்தார். ஆச்சார்ய வினோபாவே பத்து வயதிலேயே பிரமச்சரிய விரதம் பூண்டார். அதினின்றும் அவர் வழுவியது கிடையாது. வாலிபதசையின் தடுமாற்றத்தினால் கூட சிறிதளவேனும் பாதிக்கப் படாதவரென்றே தெரிந்து வங்காளத்தின் பயங்கர வியக்கத்தினரின் பசப்புகளிலீடுபட்டிருந்த அவர் உள்ளதை "சுயநலதுறவு மூலம் மற்றையோர்க்குச்சேவை செய்யவேண்டும்" என்ற காந்தியடிகளின் கோட்பாடு கவர்ந்தது. அன்று தொடக்கம் வினோபாஜீ 'நான்' எனும் உணர்ச்சியைக் கடிந்தொதுக்கினார். அவர் கண்ட ஆண்மை வெற்றி மகாத்மா செய்த தன்னடக்க முயற்சி போக வாழ்விலீடுபட்ட ஒரு பேடியின் வீண்முயற்சியாக்கிவிட்டது. அவர் பணமுபயோகப்படுத்துவதை முற்றாய்விட்டு விட்டார். தனக்காக மற்றையவர்கள் பணஞ்செலவழிப்பதைக் கூட அவர் அனுமதிக்கவில்லை. பல்லாண்டுகளாக, நடந்தேயொழிய அவர் எங்கும் சென்றது கிடையாது. அவரது உணவு தயிரும் பழச்சாறுந்தான். இவ்வுணவின் மூலம், சிறைவாசத்தின் போது அவரைப்பற்றிக்கொண்ட குடற்புண்ணோயை, மேலோங்காது கட்டுப்படுத்த முடிந்தது. குடலிலேற்பட்ட அவ்விரணமும் ஒருநல்வரமேயென்றும், அதுகாரணமாகதான் ஏற்கெனவே நடத்திவந்த எளிமையான வாழ்க்கையை மேலும் எளிமையாக்க முடிந்ததென்றும் அவர் கூறுவார். உணவை விழுங்குமுன் அதை வாயுள் வைத்து சிறிதுநேரம் அலசியபிறகே விழுங்குவார். உணவு வயிற்றுக்குட்போகுமுன் அதை பாதிசீரணிக்கச் செய்யும்இம்முறை திரு. கிளாட்ஸ்டன் அவர்களது (Gladstones) முறைபோல அவ்வளவு சங்கடமானதன்று. ஏனெனில், ஒரு பத்துமாதக் குழந்தைக்குக்கொடுக்கப்படும் உணவின் அளவேஅவரது உணவின் அளவும்'

[தொடரும்]



# வினோபாஜீ காட்டிய வழி

## (பொ. கந்தையா)

காந்தியடிகள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டாரே என்ற கவலையுடன் வாழ்ந்தநமக்கு, வருந்தாதீர்கள் என்று அபயமளித்து வினோபாஜீ வழிகாட்டுகிறார்கள். காந்தியடிகளின் தெய்வீகவாழ்க்கையைப்போன்று வினோபாஜீயின் தியாக வாழ்க்கையும் உலகமக்கள் எல்லோரையும் கவர்ந்துள்ளது. காந்தியடிகள் அன்னிய நாட்டாரிடமிருந்துதேசத்தை மீட்டுச்சொந்தமக்களுக்குத்தந்தார். வினோபாஜீ நிலச்சுவான்தார்களிடமிருந்து விளைநிலங்களை வாங்கி ஏழைமக்களுக்குத் தருகிறார். வினோபாஜீயின் பூதான யக்ஞம் அணுக்குண்டும் அஞ்சும்படியான அன்புப்புரட்சியாகும். இம்மகான்களின்வாழ்க்கையிலிருந்து அன்பினால் எதையும் சாதித்துவிடலாம் என்பதை நாம் தெரிந்து கொண்டோம்,

மேடைப்பேச்சுகளால் பயன் ஒன்றுமில்லை. திறம்படப்பேசுவது மட்டில் நாம் நின்று விடுகிறோம். பேச்சு செயலாக பரிணமிக்கவேண்டும்; போதனைசாதனையாக மலரவேண்டும். ஆதலால் நாம் போதனைகளைக் குறைத்துச் சாதனைகளைக் கூட்டிக்கொள்ள வேண்டும் இந்த வழிக்குத்தான் வினோபாஜீ நம்மை இட்டுச் செல்கிறார். வினோபாஜீ ஒன்றுபோதிக்கிறார்; இரண்டு செய்கிறார். நாம் நான்கு போதிக்கிறோம்; ஒன்றும் செய்வதில்லை. இதனால் மக்கட் சமூகமே பின்சென்று கொண்டிருக்கிறது. நமது படுமோசமான வீழ்ச்சியை மகான்கள்தான் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். மகான்களின் ஆசியோடு நமது முயற்சியும் சேர்ந்தால்தான்நாம் விடுதலை பெற்று மனிதர்களாக வாழமுடியும்.

வினோபாஜீயின் வாழ்க்கைப்பாதையில் அடி எடுத்து வைப்பதற்கு முன் காந்தியடிகளினதும் வினோபாஜீயினதும் வாழ்க்கைச் சரித்திரங்களை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். வாழ்க்கை நாணயத்தின் இருபக்கங்களாகிய அன்பையும் சத்தியத்தையும் அவர்கள் எவ்வாறு சோதனை செய்து மேம்பாடடைந்தனர் என்று தெரிந்து கொள்வது அவசியம். அப்போது நம்மிலுள்ள குறைபாடுகள் ஒவ்வொன்றாகத் தெரியும். சிலபகுதிகள் நம்மை வெட்கித் தலைகுனிய வைக்கும். காணும் குறைபாடுகளை நாளடைவில் நீக்கமுயல வேண்

டும். பழக்கத்திலை் இப்படி நடக்கிறோம் என்ற பயனற்ற பேச்சை விட்டு விட்டு, புதுமையை- புதுவழியை எப்போதும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்.

நமது வாழ்க்கையை ஆச்சிரமங்களோடும் பெரிய மனிதரின் கூட்டுறவோடும் இணைத்து விடவேண்டும். அப்போது நிச்சயம் நமக்கு வாழ்வுண்டு. விநோபாஜீ முப்பது வருடங்களுக்குமேலாக ஆச்சிரமத்தில் வாழ்ந்தார், காந்தியடிகளுடன் சேர்ந்து சீவித்தார். அதன் பயனை இன்று நாம் காண்கிறோம். பெரியோர்களுடன் வாழ்வதே உண்மையான கல்வியென்று விநோபாஜீயே கூறியுள்ளார். விநோபாஜீயின் அருளுபதேசங்களை சர்வோதயம், கிராமோதயம் பத்திரிகைகளிலும், அவரது நூல்களிலும், படித்தறிந்துகொள்ளவேண்டும், விநோபாஜீ எழுதிய கீதைப்பேருரைகள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய நூலாகும்.

நமது ஆற்றலுக்கேற்பச் சிலதீர்மானங்களைச் செய்து அவற்றின் வழி ஒழுகுவதின் மூலம் விநோபாஜீயின் வழியில் செல்ல முயலவேண்டும்,

1 தினமும் அதிகாலையில் நான்கு மணிக்கே நித்திரைவிட்டெழுதல்

2 காலையிலும் மாலையிலும் தவறாது பிரார்த்தனை செய்தல்.

3 அன்றாட வாழ்வில் அன்பு சத்தியம் என்பனவற்றைக் கையாளுதல்.

4 நமது தேவைகளை இயன்றமட்டுக்குக்குறைத்து எளிமையான வாழ்க்கையை நடத்துதல். நமது தேவைக்குமேல் எதையும் சேர்த்து வைக்காதிருத்தல்.

5 பிறரைத்திருப்திப்படுத்துவதற்காகச் செய்யும் காரியங்களைக் குறைத்து மனச்சாட்சியின்படி நடக்கத் தெண்டித்தல்.

6 உணவு உடைமற்றும் தேவைகளில் கூடியவரை சுதேசிப்பொருட்களை ஆதரித்தல்,



7 சரீர உழைப்பற்றவர்கள் தினமும் சிலமணிநேரம் சரீர உழைப்பில் ஈடுபடுதல்.

8 தினமும் சிலமைல் தூரம் நடத்தல்.

9 ஒவ்வொருநாளும் நேரத்தின் ஒருபகுதியைப் பிறர் நலத்துக்குப் பாடுபடுவதில் செலவுசெய்தல்.

10 ஒவ்வொருவரும் தமதுஉழைப்பில் -வருமானத்தில் குறித்த ஒரு பகுதியை பொதுநலத்திற்குத் தானம் செய்தல்.

11 ஒரு சதத்தையோ, ஒருநிமிஷத்தையோ தீயபழக்கத்திற்கேனும், வீண்செலவுகளுக்கேனும் பாழாக்காதிருத்தல்.

12 ஏழைகளின் அன்றாட இன்ப துன்பங்களில் கலந்து கொண்டு அவர்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடுதல்.

13 ஏழைகளுக்கோ, சாதாரண மக்களுக்கோ கிடைக்காதஉரிமைகளைத்தான் அனுபவிக்க மறுத்தல்.

14 தனக்குச் சொந்தமான காணி பூமிகளில் ஒரு பகுதியை ஏழைகளுக்குத் தானமாகக் கொடுத்தல்.

15 காந்திய சர்வோதய பூதானக் கருத்துக்களை தெரிந்து கொள்ளுதல்; அவற்றைப் பரப்புதல். தன்னால் சாதிக்க முடிந்ததையே பிறரைச் சாதிக்கும்படி போதித்தல்.

இப்படி நாளடைவில் நமது வாழ்க்கையை நல்லதீர்மானங்களாகிய அணைகளின் மூலம் பாதுகாத்து வந்தால். காந்தியடிகள் விநோபாஜீ போன்ற மகான்களின் கடவுள்இராச்சியத்திற்கு வழிவகுத்தவர்களாவோம். வாழ்க விநோபாஜி; வாழ்க பூதானம்;

வாழ்க சர்வோதயம்.

# பூமி தானப் புரட்சி

(பெ. பொ. சிவசேகரன்)
(திருவள்ளுவர் கழகம் திருக்கோணமலை.)

1. புரட்சி! புரட்சி!! புரட்சியே!!!
புதுமை யான புரட்சியே
புரட்சி! புரட்சி!! புரட்சியே!!!
பூமி தானப் புரட்சியே. (புரட்சி)

2. மண்ணை விண்ணாய் ஆக்கிடும்
மாட்சி மிக்க புரட்சியே
எண்ணி எண்ணிப் பார்த்திடில்
இதயம் அள்ளும் புரட்சியே. (புரட்சி)

3. அணுவைக் கொண்டு பாரினை
ஆட்டி வைக்கும் அரசரைப்
பணிய வைத்துப் போரிடும்
படை ஒழிக்கும் புரட்சியே. (புரட்சி)

4. பகையைக் கொண்டு பகையினைப்
பணிய வைக்கும் முறையினை
விடை கொடுத்துச் சாந்தியை
வேண்டி நிற்கும் புரட்சியே. (புரட்சி)

5. வறுமை செல்வம் என்றிரு
வகுப்புவாத நோய் தரும்
கறை யொழித்து நாட்டினைக்
கவி னுறச்செய் புரட்சியே. (புரட்சி)

6. எங்கும் இன்பம் பொங்கிட
ஏற்றத் தாழ்வு நீங்கிட
தங்கு தடைகள் இன்றியே
தாவித் தாவி வருகுது. (புரட்சி)

7. கருணை யாளன் நெஞ்சினில்
கடைந் தெடுத்த அமுதமாம்
குருவி னோபா யாவர்க்கும்
கொடுத் தளிக்கும் கவசமாம். (புரட்சி)



# திருக்குறளைப் படி!

(ராஜாஜீ)

புவனேசுவரி என்ற ஊரில் ஒரு வாலிபன் இருந்தான். அவனுடைய நினைவுக்குமுன் அவன் தகப்பனும் தாயும் இறந்து போய்விட்டார்கள். ஆயினும் தகப்பனார் வைத்திருந்த வீடு, பசுமாடுகள், கொஞ்சம் பணம் இவற்றை வைத்துக்கொண்டு எப்படியோ வளர்ந்து, சரியாக ஜீவனம் நடத்திவந்தான். ஊரார் சொன்னதைக் கேட்டுத் தன் தகப்பனார் இப்படித் தனக்கு வேண்டியதெல்லாம் வைத்து விட்டு மேலுலகம் சென்றாரே என்று தவறாமல் தகப்பனாருக்கு ஆண்டுதோறும் திதி செய்து வந்தான். மிக்க நன்றியுள்ளவனாக இருந்தான்.

இவ்வாறெல்லாம் நன்றாக இருந்தபோது, இடையில் ஒருவர், அவன் வீட்டிற்கு விருந்தினராக வந்தார். அவர் வாலிபனுடன் பேச ஆரம்பித்தார்.

"என்னத்திற்காக இந்தத் திதி செய்கிறாய்? உனக்குத்தகப்பனார் என்று ஒருவர் இருந்ததில்லை; யாரோ ஒருவர் சொன்னதைக்கேட்டு வீண் செலவு செய்கிறாய்; தகப்பனார் என்கிற கட்டுக் கதையை நம்பாதே" என்றார்.

"நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லை, என் தகப்பனார் எனக்கு இந்த வீட்டை வைத்து விட்டுப் போனாரே. அவர் இல்லாமலிருந்தால் எனக்கு வீடு எங்கே வந்திருக்கும்?" என்றான்.

"தகப்பனார் இருந்தார் என்று உனக்கு எப்படித்தெரியும்? நீ அவரைப் பார்த்தாயா?" என்று கேட்டார், விருந்துக்கு வந்த பண்டிதர்.

"இந்த வீடு எப்படி உண்டாயிற்று? அவர் கட்டித்தானே உண்டாயிற்று?" என்றான் பையன்.

"பைத்தியக்காரனே! வீடு செங்கல்லால் உண்டாயிற்று. செங்கல்லும், சுண்ணாம்பும், மரச்சாமானும், மூங்கிலும், ஓட்டு வில்லைகளும், சேர்ந்து வீடு உண்டாயிற்றென்று உனக்குத் தெரியவில்லையே

நீ படித்துக் கொஞ்சம் அறிவு சம்பாதிக்க வேண்டும். திருக்குறளையாவது படி" என்றார்.

"இந்தப் பசு மாடு எப்படி வந்தது எனக்கு?" என்றான் சுப்பராயன்.

"பசுமாடா? சந்தையில் போய்ப் பார்! எத்தனையோ மாடுகள், எத்தனையோ கன்றுகள் அங்கேகாண்பாய்! உனக்குத்தகப்பன் கதையை யார் சொன்னது? பசுமாடு இருந்தால் தகப்பன் இருந்ததற்கு அத்தாட்சியா?" என்று சிரித்தார் பண்டிதர்.

"இந்தப்பணம் எப்படி வந்சது? தானாக் உண்டாகுமா?" என்றான் சுப்பராயன்.

"எந்தப் பணம்?" என்று கேட்டார் பண்டிதர்.

"இதோ ஒரு ரூபாய், இதைப்போல் பலரூபாய்கள்" என்று தன் மடியிலிருந்து எடுத்து, ஒரு வெள்ளி ரூபாயைக் காட்டினான், அந்த ரூபாயை வாங்கிக்கொண்டு இடி இடியெனப் பண்டிதர் சிரித்தார்.

"ரூபாயை நன்றாகப் பார், சர்க்கார் அதிகாரிகள் வெள்ளியைத் தட்டி முத்திரை போட்டிருக்கிறார்கள். நீ சர்க்காருக்கு அல்லவா திதிசெய்ய வேண்டும். மூடனே! பானை களிமண்ணால் ஆயிற்று, வீடு செங்கல்லால் ஆயிற்று, பணமும் பூமியிலிருந்தெடுத்த வெள்ளி மேல் போட்ட சர்க்கார் முத்திரையால் உண்டாயிற்று. ஏமாந்து போக வேண்டாம், ஊரார் சொல்லும் கதையைக் கேட்டு நீயும் நானும் ஏமாந்து போக வேண்டியதில்லை" என்றார்.

சுப்பராயனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. பண்டிதர் சொல்லுவது நிச்சயம் போல் தோன்றிற்று. சிரார்த்தம் செய்வதை நிறுத்தி விட்டான்.

இவ்வாறே பல சுப்பராயன்மார்கள் உண்டு; பண்டிதர்களும் உண்டு. இந்தப் பூமண்டலம், ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஜோதிகள், சூரிய சந்திரன்கள் எல்லாமே அணுக்களாலானவை; மாறாத விதிகளுக்கு அடங்கியவை: ஆனபடியால் கடவுள் என்பது அநாவசியமான



கதை என்பார்கள். அணுக்களும், அவற்றின் சக்தியும், அவற்றை ஆட்டும் விதியும் எல்லாம் தாமாக ஆனவை என்று கூத்தாடுவார்கள், பக்தியைப் பரிகசிப்பார்கள்,

சரி, குறளைப் படிக்கச் சொன்னாரே பண்டிதர், அதையும் படிக்கலாம்,

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

பௌத்தமா? ஜைனமா? அல்லது எந்தச் சமயத்தில் சொல்லப்பட்ட கடவுள் என்பது அல்ல கேள்வி, திருவள்ளுவர் தாம் கண்ட கடவுளைத் தியானித்துக் குறளை எழுதினார். அது போதும் நமக்கு!

கடவுள் சர்வக்ஞன், அதாவது எல்லாம் அறிந்தவன் என்று இறைவனுடைய பல குணங்களில் ஒன்றை எடுத்துச் சொல்லுவது பக்தர்களின் வழக்கம்.

**கற்றதனால் ஆய பயன் என்கொல்- வால் அறிவன்**
**நல்தாள் தொழா அர் எனின்.**

வாலறிவன் என்றால் சர்வக்ஞன்.

**வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

இக்குறள் பாட்டோடு அடியில்கண்ட நம்மாழ்வார் பாசுரத்தையும் பார்க்கலாம்:-

**கொள்கை கொளாமை இலாதான்**
**எள்கல் இராகம் இலாதான்**
**விள்கல் விளாமை விரும்பி**
**உள்கலந்தார்க்கு ஓர் அமுதே**

(எள்கல் – இகழ்தல்; இராகம்- ஆசை.)

அடியில் கண்ட கீதை சுலோகத்தையும்பார்க்கலாம்:-

**ஸமோ(அ)ஹம் ஸர்வ பூதேஷு**
**ந மே த்வேஷ்யோ(அ)ஸ்தி ந ப்ரிய;**

'எனக்கு எல்லோரும் சமம். யாரையும் நான்வெறுப்பது கிடையாது. யாரையும் இவன் எனக்கு வேண்டியவன் என்று விரும்புவதும் கிடையாது. வேண்டுதல் வேண்டாமை இலாதான்' என்கிறான் கண்ணன்.

இப்படி யாரிடமும் பாரபட்சமில்லாத இறைவனுடைய அடி சேர்ந்தவர்க்கு எந்தத்துன்பமும் இல்லை யென்றார் திருவள்ளுவர்.

# பகவத்கீதையின் மகிமை

*(தென்னாப்பிரிகா - டர்பன் திரு- ச. மு. பிள்ளை அவர்கள்)*

பல ஆண்டுகளுக்கு முன் குருக்ஷேத்திரத்தில் பார்த்தனின் தேர் முன் நின்று, கண்ணன் உபதேசித்த கீதா உபதேசங்கள் அன்றைக்கும் இன்றைக்கும், என்றைக்கும் மானிடவர்க்கத்தை உய்விக்க வல்லது.

அன்னை பாரததேவி நமக்கு மூன்று பெரிய சமய ஆச்சாரியார்களைத் தந்தருளியிருக்கிறாள். அம்மூவரும் பகவத் கீதைக்குப் பாஷ்யம் எழுதினார்கள். அம்மூவரும் கீதையைப் பகவானுடைய உபதேசமாகவே கருதினார்கள், ஆனால், நான் கீதையைப் பகவத் உபதேசமாகக்கருதி உங்களிடம் பேசப்போவதில்லை, ஓர் மானிடர் செய்த உபதேசக்கிரந்தமாகவே மதித்து பேசப்போகிறேன்.

மானிடர் ஒவ்வொருவரும் பகவத் சொரூபம் என்று நான் கருதுவதால், கீதையும் மனிதன் செய்ததாகவே கருதுகிறேன். ஆம் அந்தகிரந்தம் மானிடன் இயற்றியதுதான்; ஆனால், அதியற்புதமானது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையை உபதேசித்தார். அந்த உபதேசங்கள் இக்காலத்திற்கு ஏற்குமா? என்பது பிரச்சனை. எனக்குத் தோன்றியவரையில் இக்காலத்தில் வாழும் எனக்கும், உங்களுக்கும், இந்த நவீன உலகத்திலுள்ள ஆண் பெண்களனைவருக்கும் ஏற்றதுதான்.

இப்பொழுது நடக்கும் சகாப்தத்தை இடைக்கால சகாப்தம் என்று சொல்லலாம். இந்த சகாப்தத்தில் வாழும் நாம் மனச்சோர்வு அடைந்திருக்கிறோம், ஆயினும், நம்மை உற்சாகப்படுத்தக்கூடியது ஏதோ எதிர்காலத்தில் சம்பவிக்கப் போகிறதென்னும் நம்பிக்கையும் ஆசையும், மனதில் ஒருபக்கம் இருந்து கொண்டே இருக்கிறது.

இன்று உலகத்தில் நாகரிகம் உடைந்து இரத்தம் கசிய விழுந்து கிடக்கிறது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில்ஒரு பெரியஉத்வேகமோ அல்லது புதிய தொரு சக்தியோ, புதிய ஆவேசமோ, புதிய அவதாரமோ உண்டாகி, அதனால் இவ்வுலகம் புதிய சக்திபெற்றுத் திகழ வேண்டும்; உலக நரம்புகளிலே புதியமுறுக்கு ஏறவேண்டும்; சமூகத்திலே புதிய அமைப்புத் தோன்றவேண்டும்; நாகரிகத்திலேபுதிய மணம் கமழ வேண்டும் என்று நம்மில் பலர் ஆசையுடன் எதிர்பார்க்கின்றனர்,



நாஸ்திகமதப்பிரசாரமானது, மேல்நாடுகளிலிருந்து கீழ் நாடுகளில் பரவிக்கொண்டேயிருக்கிறது. நாஸ்திகம் ஆதிக்கம் பெறுவதற்குக் காரணமென்ன? நம்முடைய மதங்களில் பெரும்பான்மையானவை பகுத்தறிவுஎன்னும் உரைகல்லில் உரைத்துப் பார்க்கும்போது மாற்றுக் குறைவாகத்தோன்றுவதுதான்; பகுத்தறிவை தெய்வமாகக் கொண்டாடும் காலமல்லவா இது?

எனவே, பகுத்தறிவை இலட்சியமாகக் கொண்ட இக்காலத்திற்கேற்ப பகவத்கீதா உபதேசத்தை நோக்குங்கள். "மானிடர்களே; சிந்தனை செய்யுங்கள்!" என்று கீதை உபதேசிக்கிறது. எவன் சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறானோ, அவனே ஆத்மயோகி என்பதைக் கீதை வற்புறுத்திச் சொல்லுகிறது.

தன்னைமறந்த சிந்தனையிலும், ஆலோசனையிலும் ஈடுபட வேண்டுமென்று உபதேசிப்பதுடன், அவ்வாறு சிந்திக்கவும் ஆலோசிக்கவும், சாதனங்களையும் முறைகளையும் தெளிவாகக் கூறுகிறது. பகவத்கீதா உபதேசத்தை நோக்கினால் சமயதத்துவங்கள் இயற்கைச் சாத்திரங்களுக்கு விரோதமாக இருக்கும்படி போதிக்கவே இல்லை. புத்தகத்தில் எழுதி வைத்திருப்பதும், சம்பிரதாயப் பழக்கங்களும் மதங்களாகிவிடா. ஒவ்வொருமனிதனும் சுயப்பிரயாசையினால் ஆத்மதரிசனமடைய வேண்டுமென்று சொல்வதுதான் மதம்.

கண்ணுக்குத் தெரியாத விஷயங்களைச் சொல்லும் போதனைத் தத்துவங்களைப் போன்றதல்ல, பகவத்கீதா தத்துவங்கள். மானிடர் ஒவ்வொருவரும் தமக்குத்தாமே எஜமானர் என்று சுவாதீனவாழ்க்கைநடத்த வேண்டுமென்றுதான் கீதை உபதேசிக்கின்றது. ஆனால் மேற்சொன்னவாறு சுவாதீனவாழ்க்கை நடத்தவேண்டுமாயின் சில குணங்கள் இன்றியமையாதவை. அந்தக்குணங்கள் உண்டாகும்படி செய்து கொள்வதெப்படி என்பதைக்குறித்து, சாதன உபாயமார்க்கத்தையும் கீதை உபதேசிக்கிறது.

ஆத்ம தரிசன யோகத்திற்குத் தைரியம்தான் முதற்குணம் என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார். கீதா உபதேச ஆரம்பத்திலேயே „ஓ அர்ஜுனா, தைரியமாக எழுந்துநில் என்றுசொல்லுகிறார். ஆத்மீகமானது வீரம் கலந்திருக்க வேண்டுமென்று கீதைஉபதேசிக்கிறது.

*(சாது வாஸ்வானி அவர்கள் பிரசங்கத்தின் சாரமிது)*




# துர்க்கை வணக்கத்தின் முக்கியத்துவம்

(வினோபாஜீ)

இப்பொழுது வங்காளமாகாணத்தில் பூதான இயக்கத்திற்காகக் கால் நடையாய்ச் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கும் பூஜ்ய வினோபாஜீ அவர்கள் இவ்வாண்டு ஜனவரிமாதம் ஒன்பதாம் திகதி மாலைப்பிரார்த்தனை நடத்தும் நேரத்தில் கூறிய அறிவுரைகளாவன;–

எங்கள் நாடு ஓர் கண்டமென அழைக்கப்படத்தக்க பெரிய இடமாகும். இங்கே ஹிம்சை ஓர் காலமும் தலை எடுக்காது. நாட்டின் பண்புக்கும், அறிவாற்றலுக்கும் அது பொருத்தமற்றது,

இந்நாட்டின் பாரம்பரிய சொத்து அஹிம்சையே ஆகும். இந்திய மக்கள் எக்காலத்திலாவது வேறு நாட்டவர்களுடன் சண்டை தொடுத்திலர். அன்றியும் ஹிம்சைமுறையால் முன்னேறமுடியாத விதமாக நவீன விஞ்ஞானம் ஓர் நிலைமையையுண்டாக்கிவிட்டது. ஆத்ம சக்தியே கூடுதலாய் வளர்க்க இன்றைய நிலை எங்களுக்கு வெளிப்படையாகப் புத்தி புகட்டுகின்றது.

சமூக சக்தியாக அஹிம்சை உதவுமெனக் கண்டுபிடிக்கப்பட்டது இக்காலத்திற்குப் புதியதொன்றாகும். மின்சாரத்தைப்பற்றி மக்கள் வெகு காலத்திற்குமுன் அறிந்திருந்தும் அதை மக்கள் உபயோகத்திற்கு உதவச்செய்யக்கூடிய ஆற்றலைச் சிறிது காலத்திற்கு முன்பே கண்டனர், அதைப்போலவே அஹிம்சையைத் தனிப்பட்டவர் நன்னெறியாக எண்ணினார்களன்றி, சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குதவுமாற்றலுடையதென்பதை அன்று அறிந்திலர். இன்று அறிந்தனர்.

எங்களது பூர்வீக ஞானிகள் அளவற்ற சக்தி ஆன்மாவிற்கு உண்டென அறிந்தே பிரம்மவித்தையை வெளிப்படுத்தினர், அதனால் நாங்கள் "இந்தியாவில் பிறந்தவர்கள் எல்லோரும் பாக்கியவான்கள்" என்கிறோம். திரும்பவும் அஹிம்சையின் மகிமையை மூதாதையர்கள் அறிந்தபோதிலும், இன்றே இந்நாட்டில் அஹிம்சை சமூகசக்தியாக உதவுமென்பதைக் கண்டனர். ஆகவே மறுபடியும் நாங்கள் "இந்தியாவில் பிறந்தவர்கள் பாக்கியவான்கள்" என்கிறோம். சென்ற ஆண்டு புத்தகாயாவில் நடைபெற்ற "சமன்வய" ஆச்சிரமத் திறப்பு விழாவில், 'உலக ஈடேற்றம் உபநிஷத்துக்கள் போதிக்கும் ஆத்மஞானத்தினதும், புத்தமகான் போதித்தஅஹிம்சையினதும் இணைப்பிலேயே தங்கியிருக்கின்றதென்பதாக இயம்பினேன். இவ்விணைப்பே எண்ணற்ற இலக்ஷம்கைகளை ஒன்றாக உழைக்கச் செய்து ஒரு மனமுடையதாக்கும்'.



வங்காள மக்கள் சக்தி வணக்கக்காரர் என்று மதிக்கப்படுகின்றனர். அவர்கள் துர்க்கையை வணங்குகின்றார்கள். இந்நாட்களில் எங்கள் பக்தியின் அறிகுறியாக ஆடுகளைப் பலிகொடுக்கின்றோம்· அஃதாவது பலவீனரே எங்கள் பலிப்பொருளாகின்றனர், இது எள்ளப்படவேண்டிய ஓர் தவறான எண்ணமாகும்.

துர்க்கையின் வரலாற்றை வாசிக்கும் பொழுது பல தெய்வங்களின் சிறப்பு ஆற்றல்களே சேர்ந்து ஒன்றாகத் திரண்டு எழுந்ததோர் மூர்த்தமாவாள், என்று அறிகின்றோம். அதனாலன்றோ பராக்கிரம மிக்க மஹிடாசுரனை துர்க்கை வென்றாள். அஃதே போன்று, நவீன பரஸ்பர வேற்றுமைகளாய அசுரனை இல்லாமல் செய்யவேண்டுமாயின், நாங்கள் எங்கள் தனி ஆற்றல்கள் யாவற்றையும் ஒன்றாகத் திரட்டி சமூகசேவைக்கே அர்ப்பணிக்கவேண்டும்.

தெய்வாதீனமாக இப்படியான ஓர் சந்தர்ப்பத்தை இந்தப் பூதான இயக்கத்திட்டம் எங்களுக்கு அளிக்கின்றது. எல்லோரும் ஒன்றுபட்டுழைத்து இதனைப் பூர்த்தி செய்வோமாக.

# மனமே! எதற்காக நீ சலித்தாய்

(அ. இராமசாமி, ஜோகூர்பாரு, மலாயா)

1 தேவியின் திருவடியைச் சதமாகப் பற்றும் உனக்கு, உண்ண உணவும் உடுத்த ஆடையும் தந்துஉதவும் பொறுப்பு அன்னையினுடையதே யாகும். அதைப்பற்றி எள்ளளவும் கவலையுற வேண்டாம்.

2 உன் உடல் பாதுகாப்பைக்கருதி மானிடர் எவரையும் துணையாகப் பற்றி நிற்க வேண்டாம், உலகில் சகல உயிர்களையும் பாதுகாக்கும் இயற்கையாகிய அன்னையின் காருண்ய கடலில் உனக்கு இடமுண்டு.

3 அஞ்ஞானமாகிய திரையை அகற்றி தேவியின் தெரிசனத்தை காண்பிப்பதற்கு தகுதியற்றவரனைவரும், உன்னிடம் தொடர்பற்றவராவார்கள், அவர்களைப் பற்றி உனக்கு ஒன்றுமில்லை,

4 சிந்தனை என்னும் பள்ளியில் "தேவி" என்னும் உபாத்தியாயினியால் உனக்கு சகலகலாதத்துவம் போதிக்கப்படுகிறது.

5 உனக்கு அத்தியாவசியமாகிய இன்பம், துன்பம் என்ற இரு செல்வங்களையும் அன்னையே உனக்குத்தந்து உதவுகிறாள். அதை ஆனந்தமாகப்பெற்று அறிவை விருத்திசெய்து கொள்ளும் உரிமை உன்னுடையதே!

6 நீ செல்லும் பக்தி மார்க்கத்தில் ஒருவரை யொருவர் பிணைத்துக்கொண்டு சேர்ந்து செல்வது உசிதமல்ல; ஒவ்வொருவரும் அவரவர் பக்குவ நிலைக்குத் தக்கவாறுதான் முன்னேறமுடியும்.



# குணங்களைப் பின்பற்றுங்கள்! விக்ரகங்களைப் பெருக்காதீர்கள்!

[விநோபாஜீ]

காந்திஜீக்கு நினைவுச் சின்னங்கள் அமைப்பதுபற்றி மக்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள், வெளிச் சின்னங்கள் அமைக்கும் உற்சாகத்தில் உள்ளேயுள்ள பொருளை நாம் மறந்து விடலாகாது. ஆயினும் வெளிச்சின்னங்கள் ஏற்படத்தான் செய்யும். அவைகளை விவேகத்துடன் அமைக்கவேண்டும், இத்தகைய சின்னங்கள் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதைக் குறிப்பிடும் கடிதங்கள் சில எனக்கு வந்திருக்கின்றன. குறைந்தது கிராமத்திற்கு ஒரு காந்திக்கோவிலாவது எழுப்பவேண்டுமென்பது ஒரு அன்பரின் ஆலோசனை. அதில் காந்திஜி, கஸ்தூரிபாய் ஆகியோரின் சிலைகள் மட்டும் இருக்கவேண்டுமாம், இந்த ஆலோசனையைக் கூறியவரின் பக்தியை நான் மதித்த போதிலும், இம்மாதிரியான காரியத்தை நான் ஆபத்தானதென்று கருதுகிறேன் என்று சொல்லியாகவேண்டும்.

இன்று இந்தியாவில் வாழும் சில மனிதர்களை அவர்களுடைய சீடர்கள் அவதாரங்களென்று கருதுகிறார்கள். நாம் காந்திஜீயிடம் இம்மாதிரியான மூடபக்தி காட்டலாகாது. அவர் ஒரு மனிதர், மனிதராகவே அவர் வாழ்ந்தார், அவரை அப்படியே இருக்க விடுவதில் நமக்கு நன்மையுண்டு. இதனால் ஒரு மேலோரின் உருவம் நம் முன் இருக்கும். நீதியின் எல்லையொன்று நமக்குக் கிட்டும். இவை இன்று உலகுக்கு மிகவும் தேவை. இதற்கு மாறாக நாம் அவரை தேவராக்கி விடுவோமானால், அதனால் தேவர்களுக்கு நன்மை எதுவும் ஏற்படாது. நிற்க, மனிதத்தன்மையின் ஒரு சிறந்த உதாரணத்தையும் நாம் இழந்தவர்களாவோம்.

பக்தி யுணர்ச்சிக்குத் தேவையான சாதனங்களெல்லாம் ஏற்கனவே நம்மிடம் ஏராளமாய் இருக்கின்றன. அதற்குப் புதிய தேவதை எதுவும் தேவையில்லை. வாழ்வைப் புனிதமாக்கும் வழியைக் காட்டக்கூடிய புனிதமான உதாரணமொன்றே தேவை. நீதியை வற்புறுத்துவதில் புதிய உதாரணங்களைப்போல் பழையவை அவ்வ

ளவு ஆற்றல் பெற்றிருப்பதில்லை. அத்தகைய உதாரணமொன்று நமக்கு பாபுவின் உருவில் கிடைத்திருக்கின்றது. அவரை தேவராக்கும் முறையால் நாம் அதை இழந்து விடுவோம். அதற்குப் பிரதியாக வேறு பயனும் கிட்டாது. முன்னரேயுள்ள பல சம்பிரதாயங்களுடன் இன்னும் ஒன்றைக் கூட்டுவோம்; அவ்வளவுதான். அதனால் என்ன பயன்?

எந்த ராமன் பெயரைச் சொல்லிக்கொண்டே அவர் உடலை நீத்தாரோ அவனிடம் பக்தி புரிதலே சிறந்தது. அவன் நாமத்தைப் பாடுவோம்—ராமனையென்றால்—தசரதனின் புத்திரனையல்ல, எவன் பெயரை தசரதன் தன் மகனுக்கு இட்டிருந்தானோ அந்தப் பெருமானிடம், அதாவது அந்தர்யாமியான ஆத்மா ராமனிடம், ஆண்டவனின் குணங்கள் அனந்தம். அக்குணங்களைக் கருதி நாம் பல பெயர்களை ஜெபிக்கலாம். ஆனால் எந்த மனிதன் பெயரையும் கடவுளுடன் சேர்க்கலாகாது. கடந்த காலத்தில் சம்பிரதாயங்களின் பெயரால் நடந்த சண்டைகளைப்போல இதன் மூலமாக நாம் வருங்காலத்தில் சண்டைக்கு ஏற்பாடு செய்கிறோமோ என்ற அச்சங்கூட எனக்குண்டாகிறது. ஆகையால், பணிவுடன் காந்திஜீயின் மனிதத்தன்மையை மதிக்கும் முகத்தான் அவருடைய அருங் குணங்களைப் பின்பற்றுவோம். முடியுமானால், அவைகளைப் பெருக்குவோம். விக்கிரகங்களைப் பெருக்கவேண்டாம்.

***[8-2-48 கோபுரியில் நடந்த பிரார்த்தனை முடிவில் பேசியதின் சாரம்]***

---

பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே
பெருகிய கருணைவா ரிதியே
நற்றவத் துணையே ஆனந்தக் கடலே
ஞாதுரு ஞானஞே யங்கள்
அற்றவர்க் கருத நட்புடைக் கலப்பே
அநேகமாய் நின்னடிக் கன்பு
கற்றதுங் கேள்வி கேட்டதும் நின்னைக்
கண்டிடும் பொருட்டன்றோ காணே,

(தாயுமானவர்)



# புதுயுகப் புரட்சி வேந்தன்
# வினோபாஜீ வாழ்க!

எண்டிசையும் மூக்கின்மேல் விரல்வைத்(து), ஒன்றாய்
எல்லையற்ற பெருவியப்பில் ஆழ்ந்து நோக்க,
பண்டுலகின் சரித்திரத்தில், இலக்கி யத்தில்,
பகரரிய கற்பனையின் படைப்பி லெல்லாம்
கண்டிடவொண் ணுவகையில், அன்பொன் றாலே
கருதரிய அற்புதங்கள் கண்முன் காட்டி
இன்றுலகில் "நடமாடும் தெய்வம்" ஆன
இணையில் வினோ பாஜீ!நினை இசைக்கப் போமோ? (1)

புவித்துயர்க்குத் தனைத்துறந்த புத்த தேவோ?
புன்சிலுவை யிட்டவர்க்கும் கருணை பூத்த
தவச்செல்வன் ஏசுபிரான் தானோ? அல்லா
தன்னுறுதி யால்,பகையின் தலைவ ணக்கும்
நபிமணியோ? தன்னுயிரை ஒற்று மைக்கே
நல்கி,எங்கும் நிறைந்தமகாத் மாவோ?' என்று
கவியரசர் அறிவரசர் சிந்தை யெல்லாம்
களிநடஞ்செய் வினுவுருவில் கனிந்தெ ழுந்தோய்! (2)

'சமரஸத்தை வளர்ப்பதுவே நோக்கம்' என்று
சலியா,வாய்ப் பறையறைந்து, அணுக்குண் டாலே
திமிர்பிடித்த வல்லரசுக் கூட்டம், யுத்தத்
தீவளர்க்கும் இந்நாளில், வெறிபி டித்துக்
குமிறிடுகம் யூனிஸத்தின் கோட்டை யெல்லாம்
குறுகியசிற் றுருவில்ஒரு மனித னுய்ச்சென்(று)
அமிழ்தனைய பேரன்புக் கோட்டை யாகும்
அற்புதஞ்செய் திட்ட,உனை அறிவார் யாரே? (3

உடன்பிறந்தார்க் கிடையிலும்,கா லடிமண் ணேனும்
　　உறச்சகியா(து). இரத்தவெள்ளம் பெருகச் சண்டை
இடும்,கொடுமண் வெறியரெனக் கருதப் பட்டோர்
　　யாவரும்,நின் அடிபணிந்து. 'ஏற்க!' வென்றே
தொடர்பறியா எவ்வெவரோ சொந்த மாக்கிச்
　　சுகிக்கவென எல்லையற்ற தூநி லத்தைத்
தபம்பக்தி யொடுதானம் புரியச் செய்த
　　தர்மவடி வே! நினை யார் சாற்ற வல்லார்? (4)

கதிரொளிவான் காற்றுமழை கனல்நீர் போலே
　　கனிந்துணவு தருமண்ணும், மக்கட் கெல்லாம்
'பொதுவுடைமை யாம்'என்ற, இதுவ ரைக்கும்
　　'பொன்மொழி'யாய் மட்டும்நின்ற தத்து வங்கள்
நிதந்தொடர்ந்து வாழ்வினிலே படர, உள்ளார்
　　நெஞ்சுணர்ந்து திருந்தி,உவந்(து) இல்லார்க் கெல்லாம்
இதமாகப் பகிர்ந்தளிக்கும் படி,சா தித்த
　　இனியபுது யுகப்புரட்சி வேந்தே! வாழ்க! (5)

வீரசிவா ஜீபிறந்த மராட்டி மண்ணில்
　　வித்தகபா ரதமரபு விளங்கத் தோன்றி,
சீர்மிகுபன் மொழிப்புலமை யடைந்(து) அடக்கத்
　　திருவுருவாய்த் திகழ்ந்துமகான் காந்தி ஆசி
பூரணமாய்ப் பெற்[று] அரிய பிரம்மச் சர்யப்
　　பொன்மலையாய் ஒளிபரப்பிப் புனித கீதைப்
பேரருவி பொழிந்[து] இணையில் பூமி தானப்
　　பேரியக்கம்•வளர்க்கும் அறப் பெம்மான்! வாழ்க! (6)

***பரமஹம்சதாசன்.***



## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுவாமிகள்

*[மதுரை திருப்பரங்குன்றம்]*

### குழந்தைகளுக்காகப் பாடியது.

1 மாடுமனை வரவேண்டும் மக்கள் சுற்றம் வரவேண்டும்
கோடிதனம் வரவேண்டும்–முருகா–நல்ல குழந்தை அதிகம்
வேண்டும்

2 நோயில்லா வாழ்வு வேண்டும் நோகாத உள்ளம் வேண்டும்
தாயும்என் தந்தையும்நீ-முருகா-தயா என்பால் வைக்க
வேண்டும்

3 நல்லறிவு வேண்டும் நல்லன எல்லாம் வேண்டும்
அல்லல் அகல வேண்டும்–முருகா–அன்பும் பெருக வேண்டும்.

4 சுத்தம் சுசியும் வேண்டும் நான்சுகமாக வாழ வேண்டும்
நித்தம் உனதுபாதம்–முருகா–நான்நினைந்து துதிக்க வேண்டும்.

5 ஈகை இரக்கம் வேண்டும் ஈயஎல்லாம் என்னிடம் வேண்டும்
மாயை மடியவேண்டும்-முருகா-உன்மகிமை மருவவேண்டும்.

6 வித்தை அதிகம் வேண்டும் நல்ல வினயம் தரவும் வேண்டும்
பக்தி வளரவேண்டும்-முருகா-உன்பாதத்தைக் காணவேண்டும்.

7 அசையாத வீடு வேண்டும் அழியாத பொருள் வேண்டும்
வசையில்லா வாழ்வு வேண்டும்–முருகா-உன்னை வாயார
வாழ்த்த வேண்டும்.

8 அன்பும் அருளும் வேண்டும் என் அறியாமை போகவேண்டும்
துன்பம் தொடாத இடம்–முருகா–நான் தொட்டுச் சுகிக்க
வேண்டும்.

# ஆனந்தாச்சிரமச் செய்திகள்,

## வெள்ளிவிழா.

தூய அன்னை கிருஷ்ணபாய் அவர்களது துறவின் வெள்ளி விழாவானது 29-11-55 செவ்வாய்க்கிழமை ஆனந்தாச்சிரமத்தில் அன்பர்கள் கொண்டாடுவார்கள். இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் கார்த்திகை மாதம் பௌர்ணமி சேர்ந்த புண்ணிய தினத்தன்று அன்னையார், தம் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்து சுவாமி இராமதாசர் அவர்களது அருட்பணியில் ஈடுபட்டார்கள்,

இவ் வெள்ளிவிழாத் தொடர்பில் 1953ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆரம்பித்துள்ள நாமலிகித ஜெப யாகமும் அத்தினத்தன்றே முடிவடையும். அன்று வரையில் ஆச்சிரமத்துக்கு அனுப்பப்பட்ட நாமக் கொப்பிகள் யாவும் வெள்ளிவிழாவன்று அன்னையாரிடம் அர்ப்பணிக்கப்படும்.

அன்னையாரின் வாழ்க்கை வரலாறு, உபதேசங்கள், பக்தர்களின் பாராட்டுதல்கள் முதலாயின கொண்ட ஓர் வெள்ளிவிழா மலர் வெளியிட்டு. அதனை அன்றையத்தினம் அன்னையாருக்கு அர்ப்பணிக்கப்படும். வேதபாராயணம், பகவத்கீதை சுலோக பராயணம் எல்லோரும் ஒன்றுகூடி நாமம் எழுதுதல், நாமம் சொல்லுதல், பஜனை, சொற்பொழிவுகள், அன்னதானம் முதலாயின விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாகும். விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும். அன்பர்கள் எல்லோரினதும் ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது.

### நாமலிகித ஜெப யாகம்.

10-2-55 வரையில் ஆனந்தாச்சிரமத்துக்கு அனுப்பப்பட்ட கொப்பிகளின்படிக்கு 193,729,674 நாமங்கள் எழுதப்பட்டுள்ளன பங்குபற்றும் அன்பர்களின் தொகை 4617.

### தியானகாலம்.

சுவாமி இராமதாசர் அவர்கள் தினமும் காலையில் 6 மணிமுதல் 6-30 வரை ஆச்சிரமத்தில் உள்ள அன்பர்களுடன் சேர்ந்து தியானத்தில் இருக்க ஆரம்பித்துள்ளார்கள். சுவாமிகளுடன் இத்தியானத்தில் கலந்துகொள்ள விரும்பும் ஏனைய அன்பர்களும் தவது வீடுகளிலேயே அதே நேரத்தில் தியானம் செய்யலாம்.



# அருள் நெறித் திருக்கூட்டத்தின் முக்கிய தொண்டுகள்.

1, மக்களிடையே தெய்வ நம்பிக்கையையும், பக்திப் பெருக்கையும், ஆலயவழிபாட்டு உணர்வையும் வளர்க்க முயற்சிசெய்தல்

2. கிராமங்கள் நகரங்கள் எங்கும் கூட்டு வழிபாட்டு முறையினையும் பொதுப் பிரார்த்தனை நிகழ்ச்சிகளையும் தொடங்கி வைத்து நிரந்தரமாக நடத்த முற்படுதல்,

3, மக்களிடையே சமயம் உருவ வழிபாடு முதலியவற்றைப் பற்றிய தத்துவ விளக்கங்களைப் பரப்புதல்.

4. தமிழ் நாட்டின் பக்திப் பனுவல்களாகிய தேவாரத் திருமுறைகள் திவ்வியப் பிரபந்தங்களைப் படித்துப் பயனடையும்படி தூண்டுதல். மெய்யடியார்களின் திருநாட்களைக் கொண்டாடுதல்.

5, மக்களிடையே நிலவும் சாதி முதலிய பிணக்கு மனப்பான்மைகளை அகற்றி தாழ்த்தப்பட்ட நிலையில் வாழ்கின்ற மக்களிடையே பொதுவாக அவர்களது முன்னேற்றத்துக்கு வேண்டுவனவற்றைச் செய்தல்.

6. திருக்கோவில்கள் சுத்தமாய் வைக்கப்பெறவும் பூசை முதலியனவைகள் முறைப்படி ஒழுங்காக நடைபெறவும் தக்க பெருமக்களைக்கொண்டு முயற்சி செய்தல்.

7. பழம் பெரும் மன்னர்களால் எழுப்பப்பெற்ற திருக்கோவில்கள் கவனிப்பாரின்றிச் செடி கொடிகள் முளைத்துச் சிதைந்துவிடாதவண்ணம் காக்க திருநாவுக்கரசுப் பெருமான் செய்த திருஉழவாரத் திருத்தொண்டினைப் பின்பற்றித் திருக்கோவில்களைப் பாதுகாத்தல்.

8. அடிக்கடி பொதுக்கூட்டங்கள் கூட்டிச் சிறந்த முறையில் சமயக் கொள்கைகளை விளக்குதல்,

9. மேற்சொன்ன தொண்டுகள் பற்றிய துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல்.

10, இளைஞர் உலகம் தீயசக்திகளின் வசப்பட்டுத் தடுமாறாமல் காத்தல்,

என்பனவாம்

அருள் நெறித் திருக்கூட்டம்
அம்பாறை.

# ஸ்ரீ கேதார் பத்திரி யாத்திரை.

## கேதார்நாத்

பாண்டவர்கள் சென்றதாகச் சொல்லப்படும் அப்பாதைவழியே காலத்துக்குக் காலம் பல மகான்கள் சென்றிருக்கிறார்கள். சென்றவர்கள் ஆங்காங்கே தங்கள் அடையாளங்களையும் பொறித்துச் சென்றிருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது, சாந்தம், அமைதி, மௌனம் இவற்றை எத்தனைமுறை படித்திருக்கிறோம்; பேசியிருக்கிறோம்; எழுதியிருக்கிறோம். அவற்றை உணர்ந்தோமா? அனுபவித்தோமா? என்றால் அதுதான் இல்லை, கேதார்நாத்திற்கு ஒருமுறை போய்விட்டால் அங்கு அவற்றை அநுபவத்தில் உணரலாம்.

ஆலயத்தின் பின்னால் வானளாவி உயர்ந்த வெள்ளிமலை ஒன்று நிமிர்ந்து நிற்கிறது. அதைப் பார்க்குந்தோறும் சிவபிரானின் தோற்றமே கண்முன்னால் நிற்கிறது. கேதார்நாத் கடல் மட்டத்திலிருந்து 12000 அடிவரை உயரத்திலுள்ளது, பக்கத்தே உள்ளமலை 24000 அடி உயரமானது.

ஆலயத்திலிருந்து 2 மைல்தூரத்தே ஒரு குளம் உண்டு. அதை முதுவேனிற்காலத்தே மாத்திரம் காணலாம். மற்றைய காலமெல்லாம் உறைபனியால் மூடுண்டு கிடக்கும், உருகுகின்ற காலத்தில் குளத்திலே வெண்டாமரைப் புஷ்பங்கள் காணப்படும். அவற்றை எடுத்துவந்து கேதார் நாதனுக்குப் பூஜை செய்யும் வழக்கம் இன்றுமுண்டு. அக்காலத்தும் இவை உண்டு என்பதற்குச் சம்பந்தர் தேவாரமும் சுந்தரர் தேவாரமும் சாட்சி பகர்கின்றன.

*"தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்*
*இண்டை கட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்*
*வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்*
*கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே"*
(சம்பந்தர்)

*"கொம்பைப்பிடித் தொருக்காலர்கள் இருக்கால்மலர் தூவி*
*நம்பன்னமை ஆள்வானென்று நடுநாளையும் பகலும்*
*கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்*
*செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெனீரே"*
(சுந்தரர்)



## கேதாரகௌரி

ஐப்பசி மாதத்து அமவாசை தினத்தன்று பஞ்சாங்கத்தில் கேதார கௌரி விரதம் என்று அச்சிட்டிருப்பதை அன்பர்கள் யாவரும் அறிவர், கௌரி நோன்பு நோற்போர் அன்றையத்தினம் நோற்றலையும் அறிந்துள்ளோம், புராணத்தில் வரும் அதன் வரலாறுபற்றிப் பலர் அறியார். ஆதலால் அதனை இங்கு நினைவூட்டுகின்றோம்,

ஆன்மகோடிகள்மேல் அளவிலாக் கருணை உடையவள் இறைவி. ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருவிக்க அவைகளை உலக பந்தத்தில் கட்டுவாள். பக்குவம் அடைந்தபின் அக்கட்டுகளை விடுவிப்பான் இறைவன். முத்தி ஒன்றையே முழு இலக்காக்கொண்டு நீண்ட நாட்கள் தவம் செய்தார். பிருங்கி என்ற முனிவர். இறைவியை வணங்குவோர் போகத்திற்காகவும் இறைவனை வணங்குவோர் முத்திக்காகவும் என்பது முனிவரது நினைவு. ஆதலால் இறைவனை அர்த்தநாரீச்சுர உருவத்தில் வணங்கச் சம்மதித்திலது முனிவரது உள்ளம். வண்டு உருவில் இறைவியைப் பிரித்து இறைவனை மட்டும் வலம் வந்தார் முனிவர்.

முனிவர் செயலுக்கு இறைவி இறைவனிடம் காரணம் வினவினள், இவ்வுலக இன்பத்தை விரும்புவார் உன்னைமட்டும் இறைஞ்சுவார்; முத்தியை விழைப்பவர் என்னைமட்டும் ஏத்துவார், இரண்டையும் விரும்புவார் இருவரையும் சேர்த்து வழிபடுவர். இம்மூவருள் முத்தியில் பற்றுவைத்தவன் இம்முனிவன். அதனாற்றான் வழிமுறை உணர்ந்து என்னை வலம்வந்தான் என்று விளக்கம் உரைத்தனன் இறைவன்.

இதனைக் கேட்டாள் இறைவி முனிவர் திருமேனியிலிருந்த சக்தியை வாங்கினள். தடுமாறினார் முனிவர். முனிவருக்கு ஊன்றுகோலொன்றருளினார் உமாபதி. அதைப்பார்த்துப் பொறுத்திலள் இறைவி. பிரீதியை இழந்தாள்; சிவத்தைப் பிரிந்தாள்: அவனியை அடைந்தாள். பிரிவுத்துயர் மனத்தை வருத்தியது. கனிவொடு எதிர்வணங்கிய கவுதமரைக் கண்டாள், அவரிடம் தனது நிலையை உரைத்துத் தளர்ந்தாள்,

தேவீ! கேதாரம் என்பது ஒரு ஸ்தலம். புரட்டாசித் தசமிமுதல் ஐப்பசி அமாவாசைவரை அங்குவழிபடின், பரமசிவனார் திருவருள் கிடைக்கும் என்று வணங்கிச் சென்றார் வந்த கௌதமர்,

அம்பிகை விரைந்து அத்தலம் அடைந்தாள். வகுத்த திட்டப்படி வழிபட்டாள், இருபத்தோராம் நாள் எம்பெருமானார் விடைமேல் எழுந்தருளினார். வழிபாட்டின் பயனாக பாதித் திருமேனியென, பிரிபடா நிலையில் எங்கள் அன்னையாருக்குத் தன் திருமேனியில் பங்களித்தனன் பரன். இறைவி உணர்த்திய அந்நோன்பை, தொடர்ந்து அநுட்டித்துப் பேறுபெற்றவர் புண்ணியவதி பாக்கியவதி முதலினோர், அவ்வளவுநாள் நோன்பை ஏற்க இயலாதோர் ஐப்பசி அமாவாசைமட்டும் அநுட்டித்தாலும் பயன் உளது என்று அருள் நூல்கள் அறிவிக்கின்றன. 21 இழைகொண்ட பட்டுநூலை 21 முடியிட்டு வழிபாட்டின் இறுதியில் கையில் தரிப்பர் ஆடவர், கழுத்தில் அணிவர் மகளிர்,

கேதார்நாத்திற்கு வரும் யாத்திரீகர்கள் சாதாரணமாய்க் காலையில் வந்து ஆண்டவனை ஆராதித்தபின்பு மாலையிலேயே திரும்புவது வழக்கம். கேதார்நாத்திலுள்ள கொடிய குளிரே அதற்குக் காரணம், முதல்நாள் மத்தியானம் 12 மணிக்குச் சென்ற எங்களுக்கு அன்றிரவு தங்கி மறுநாள் மாலை திரும்பும் வாய்ப்புக் கிடைத்தது. கேதார்நாத்தின் புனிதமான ஆத்மீக அலைக்குள்ளே ஒரு முழுநாளாவது மூழ்கிக்கிடக்கும் பேறு கிடைத்ததைப்பற்றி கேதார்நாதனுக்கு என்றும் நன்றிசெலுத்திக் கடமைப்பட்டுள்ளோம்,

கேதார்நாதனுக்கு மிகப் பக்தியோடு பூஜை புரியும் தலைமைப் பூஜகர் ஸ்ரீ சதாசிவலிங்க சிவ ஆச்சாரியார் அவர்களோடு பழகும் வாய்ப்பும் கிடைத்தது. அவரது உடல் நிலையோ அக்குளிரைத்தாங்கும் நிலையற்றது, அப்படி இருந்தும் கேதார்நாதன் மேற்கொண்ட பிரேமையினால் அங்கு உறங்கினார். சிவசின்னங்களாகிய விபூதியையும் உருத்திராக்கத்தையும் கண்டுவிட்டால் கண்ணீர்மல்கக் கசிந்து நெகிழ்வார். வடநாட்டுச் க்ஷேத்திரங்களிலே விபூதி பூசுபவர்களைக் காண்பது குறைவே. விபூதி பூசிய கோலத்தோடு எங்களைக் கண்ட ஆச்சாரியாருக்கு ஒரு உள்ள நெகிழ்ச்சியுண்டாகித்தாமாகவே வந்து



எங்களோடு அளவளாவினார், தமது குடிசைக்கு அழைத்துச் சென்று நெருப்புமூட்டி குளிரைப்போக்கி, சூடான பானமும் குடிக்க உதவி, தாம் அணிந்திருந்த கண்டமாலையை எங்கள் கழுத்திலே அணிந்து 'நமசிவாய' மந்திரத்தின் பெருமையைப்பற்றி எல்லாம் மணித்தியாலக்கணக்காகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் தமக்குத் தெரிந்த பாஷையிலேயே பேசினார். நாமும் எமக்குத் தெரிந்த பாஷையிலேயே பேசினோம். அவர் கருத்துக்களையெல்லாம் நாம் புரிந்துகொண்டோம், அவரும் எமது கருத்துக்களையெல்லாம் புரிந்துகொண்டார். உள்ள ஒன்றிப்பில் பாஷை இல்லாமலே பேசிக்கொள்ளலாம் என்பதை அன்று அநுபவத்தில் உணர்ந்தோம், மாலை 4 மணிக்குத் தேவ பூஜை. அப்பூஜையை ஆச்சாரியார் அவர்களே நடாத்திக் கேதார்நாதனின் பிரசாதம் கொடுத்து எங்களுக்கெல்லாம் விடைதந்து அனுப்பிவைத்தார். கேதார்நாதனே அவர் உருவில் வந்து இவ்வளவெல்லாம் செய்து வைத்தான். ஆச்சாரியாரிடம் விடைபெற்று திருக்கோயில் முன்றிலில் வணக்கம் செய்து எழுந்தபோது பல்நாட் பழகிய அன்புடைய ஒருவரை விட்டுப் பிரிவது போன்ற ஒரு ஏக்கம் மனதிற் படர்ந்தது. விட்டுப் பிரியவே மனம் வரவில்லை. முதநாள் இருந்த குளிரின் கொடுமை விட்டுப் பிரியும்போது எங்கோ மறைந்தோடிவிட்டது. பிரிய மனமில்லாது பிரிந்தோம், சந்நிதியை விட்டுப் பிரியும்போது சாயந்தரம் 4¾ மணிக்கு மேலாகிவிட்டது, 7 மைல் தூரம் நடந்துவந்து கௌரிகுண்டத்தில்தான் தங்கவேண்டும். வானம் கறுத்து மழைபெய்வதற்கேற்ற அறிகுறிகளும் தென்பட்டன. இருந்தாற்போல் உறைபனி விழுவதுண்டு என்று எச்சரித்தார்கள். பிரியமனமில்லாதிருந்த எங்கள் மனத்தை மாற்றக் கேதார் நாதனே வேறோர் கருவிமூலம் வந்து உரைத்தான் போலும். ஏழுமைல் தூரமும் ஓட்டமாக ஓடிவந்து மாலை 7 மணிக்குக் கௌரிகுண்டத்தைச்சேர்ந்துவிட்டோம், அன்று இரவு கேதார்நாதன் கருணையினால் நல்ல உணவு உண்டோம். நல்ல நித்திரை தூங்கினோம். உள்ளமும் கங்கையைப்போல் தெளிந்து சாந்த நிலையடைந்திருந்தது. மலை ஏறிய வருத்தம் குளிரின்கொடுமை. இவையெல்லாம் எப்படி மறைந்தனவோ அறியோம். கௌரிகுண்டிலிருந்து கேதார்நாத்செல்ல 7 மைலும் 6½ மணித்தியாலம்வரை சென்றது. மேலிருந்து கீழ்இறங்கும்போது 2 மணித்தியாலத்திற்றன் எவ்வளவு இலாகவமாக இறங்கினோம். மனிதன் வாழ்க்

கையில் முன்னேறுவதென்றால் இப்படிக் கஷ்டந்தான். கீழ்நோக்கி வருவதென்றால் ஒரு சில நிமிஷங்களுக்குள்ளே நிகழ்ந்துவிடலாம்.

மறுநாட்காலை வெந்நீர் ஸ்நானம் செய்து கௌரிதேவியை வணங்கி காலை 9 மணிக்கு சோறுசாப்பிட்டுவிட்டு பிரயாணத்தை மேற்கொண்டோம். மாலை 6 மணிவரை நடந்தோம் பியோம் சட்டியில் அன்றிரவு தங்கினோம், மறுநாட்காலை 5 மணிக்கே பிரயாணத்தை ஆரம்பித்தோம். குப்தகாசிக்கு அண்மையில் பத்திரிசெல்லும் பாதை பிரிந்து செல்கிறது. அவ்வழியாகத்திரும்பி உகிமடம் வந்து சேர்ந்தோம். பிரிகிற இடத்திலிருந்து பாதை ஒரே இறக்கமாய் இருந்தது. அடியில் வெகு தூரத்தில் மந்தாகினி கங்கை ஓடுகிறது. மந்தாகினியைக் கடந்து ஒரு பெரிய மேடு ஏறினால் உகிமடம் வருகிறது.

## உகிமடம்

அப்பகுதியிலுள்ள முக்கியமான இடங்களில் இதுவுமொன்று. இங்கேதான் கேதார்நாத், குப்தகாசி முதலிய கோயில்களுக்கு அதிபதியாய் இருக்கும் மடாதிபதி இருந்துவருகிறார். இந்த மடமும் ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. உகி மடத்தில் அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. இங்கு சிவன், தேவி இருவருக்கும் கோயில் உண்டு. மாந்தாதா தவஞ்செய்த இடமாகவுஞ் சொல்லப்படுகிறது. வசிட்டமுனிவருடைய சிலை ஒன்று அங்கு உண்டு. கேதார்நாத்தில் பூஜைக்குப் பொறுப்பாக இருக்கும் சங்கராச்சாரியார் மாரிகாலத்தில் இங்குத்தான் தங்குவார்.

உகிமாத்திலிருந்து 3 மைல் தூரத்திலுள்ள கணேசச் சட்டியில் அன்று மத்தியானம் தங்கினோம், இரண்டு மூன்று கடைகள் மாத்திரமே அங்கு உண்டு. நாங்கள் தங்கிய கடைக்காரர், எங்களுக்காக மிகப்பாடுபட்டார். யாத்திரீயர்களுக்குச் செய்யும் சேவை ஆண்டவனுக்குச் செய்த சேவையே என்று கூறினார், தாமே தமது கையால் எங்களுக்கு உணவு ஆக்கி தாமே பரிமாறி எங்களை உண்பித்தார். கேதார்நாதனே அவர்மூலம்வந்து அன்பைச் சொரிந்து உணவை ஊட்டினான்.

(தொடரும்)

# Vinobha Exposes A Fallacy.

Those who read newspapers know that the word Shanti or peace is most frequently used today. This is not a new word for us. In fact it is one of our oldest.

Whenever we have a religious service or some other work we begin and end with the word Shanthi or peace three times. But these days the word peace is resorted to not only for religious but also for irreligious actions, Nation after nation is preparing itself to increase its armament and the highest researcher in weapons of death are being conducted with the help of scientists and all this is done in the name of peace. It is not that the nations and leaders who use the name of peace in their quest of armament are hypocrites. Peace through armament is an age-old illusion. But the strange thing is that this illusion continues even in the present age called the scientific age. It is believed that the weak will be sacrificed like goats and those who have the strength of lions will escape it. But experience says that while goats are sacrificed lions are hunted out and the race of lions would have been extinct long ago but for the mercy of man.

In this age of science any increase of the power of the violent will only lead to the wiping out of human society. We should have been free from this illusion. But old habits and old illusions die hard. Thus continues the illusion that the peace can be maintained among nations only if they are fully armed and strengthened. But it is not self-contradictory to manufacture things that destroy peace to maintain peace, things that produce fear in order to create fearlessness? The President of the U, S, A, suffers from this illusion at the present time, Parasuram suffered from it in the old time, Parasuram was a Brahmin, a teacher, yet he became a warrior in order to remove the injustice of war. But his experiment did not succeed in establishing peace and ultimately Parasuram had to lay down arms and take up the ploughshare in the field, This effort of establishing non-violence through violence has failed time after time and in future may lead not only to self destruction but to the destruction of the human race.

Another effort is also made for world peace. The leaders of some nations sit round a table for discussions and consultations. This is known as U, N. O, This effort is not so senseless as the effort of establishing non-violence through violence, But its weakness lies in the fact those who sit and discuss do not trust one another, It is not possible that peace can be brought about by discussion without mutual trust, Again it is only certain nations that have a place in the U, N' O, and great nations like China have no place in the U, N, O, because they are not trusted. And those that sit there talk in the belief that others are dishonest and out to deceive and betray them, Peace can be built only on the foundation of faith and not on that of suspicion or mutual distrust,

Regd. at the G. P. O, as News Paper H, C, 59-500

# [illegible]கவேள் பன்னிரு திருமுறை

**அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாதிய நூல்கள்**

**மூலமும [illegible] விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்**

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?" என மெய்ஞ்ஞானியர் தாயுமானுர் வியந்து பாராட்டிய அநுபூதிச் செல்வர் அருணகிரிநாதரருளிய திருப்புகழ் அனைத்துக்கும் பொழிப்புரை குறிப்புரை ஆராய்ச்சி முதலியன நூல் முறையாக இதுகாறும் வெளிவரவில்லை என்ற குறையை நீக்குதலையும் தமிழ் மறைக்கும் முருகபக்தி வளர்ச்சிக்கும் சேவை புரிதலையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளது இந்நன் முயற்சி.

பரிபாடல், பத்துப்பாட்டு முதலிய பழந்தமிழ்ச் சங்க நூல்கள், யோகஞான நூல்கல், சூடாமணி நிகண்டு, சிலப்பதிகா முதலிய இலக்கியங்கள், தக்கயாகப்பரணி, தேவாரம். திருவாசகம், திருவிசைப்பா திருமந்திரம், திருக்கோவையார். திருக்குறள், திருவாய்மொழி முதலிய பல பிரபந்த நூல்கள், மந்திர நூல்கள் பல்வேறு புராணங்கள் ஆதாரங்களுடன் கூடிய பல ஆய சரித்திர வரலாறுகள், தத்துவ விளக்கங்கள் இவை பல பல குறிப்புரைகளாக இந்நூலை அலங்கரிக்கின்றன, பலபடப் பொருள் [illegible] னும் பாகுபாடுகள் பல விளக்கப் பட்டுள்ளன.

நூல் நிலையங்கள், தேவஸ்தானங்கள், மடாலயங்கள், கலாசாலை, பள்ளிக்கூடம், அன்பர்கள் இல்லம் இவைகளில் நிரந்தா [illegible]க வைத்துப், பரம்பரைக்குப் பயன்படும் பூசிக்கத்தகும் பொக்கிஷம்.

[illegible]ரியர்: தேவார ஒளிநெறி முதலிய நூல்களை வெளியிட்டு தமிழ் மறைக்கும் சமய வளர்ச்சிக்கும் பரம்பரை [illegible] நிலைக்கக்கூடிய அரும்பெருஞ்சேவை ஆற்றிவரும் —
**ராவ்பகதூர். தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை.** M. A.
Retired Personal Assistant to the Inspector Genl. of Registration.

| தொகுதி | தலங்கள் | பாடல்கள் | பக்கங்கள் | விலை. ரூ. |
|---|---|---|---|---|
| 1 | *முதல்மூன்று படைவீடுகள்* | *200* | *456* | *5-8-0* |
| 2 | *ஏனைய மூன்றுபடைவீடுகள்* | *250* | *636* | *7-8-0* |
| 3 | *பஞ்சபூதத் தலங்கள்* | *210* | *55[illegible]* | *6 0 0* |
| 4 | *ஏனைய தலங்கள்* | *340* | *[illegible]00* | *9-8 0* |

ஏனைய தொகுதிகள் அச்சில்: இவைவிரைவில் வெளிவர தமிழுலகம் பேராதரவளித்துதவ வேண்டுகின்றோம்.

**பதிப்பாளர் : மீனுக்ஷி கல்யாணசுந்தரம்**
2, இரண்டாவதுதெரு, வடக்குக் கோபாலபுரம். சென்னை-6.

Hony. Editor, K. Ramachandran, 60. Deal Place, Colpetty
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 18-3-55